Bharatiya Vidya Bhavan BULLETIN

VOLUME XXX No. 12 COIMBATORE KENDRA JANUARY 2022

**Dear reader,**

This month's personality is "Universal icon for the Youth" - Swami Vivekananda, the great Indian thinker who is not merely a historical figure, not merely the symbol of the past, but a living power working for the good of mankind. In addition we have included a write up on Netaji Subhash Chandra Bose, one of the architects of Indian freedom struggle whose 125th birthday is celebrated this year. We have also included articles on V.O.Chidambaram Pillai and Thiruvalluvar. A report on Bharatiyar Memorial centenary celebration organized by Bhavan's Coimbatore Kendra, reports of the schools and a few thought provoking write ups are also presented here.

Wish you a happy reading!
The editorial board

## PERSONALITY OF THE MONTH
# SWAMI VIVEKANANDA



### A Universal Icon for the Youth

### HISTORICAL BACKGROUND

The end of the nineteenth century marked one of the great watersheds in human history. Medieval beliefs, values and ideals were losing ground and the twentieth century with its spectacular achievements in science and technology, and radical socio- political changes, was about to be born. The world was in need of an integral view of life capable of bringing about all-round reconciliation of the conflicting ideas and ideals of the modern age, and fulfilling the aspirations of the human soul newly emancipated from centuries of superstitions and dogmatism. It was at this crucial juncture that Swami Vivekananda appeared on world scene - a spiritual colossus with his feet planted on the East and the West, straddling millenniums in the sweep of his vision, with his heart open to the whole humanity

### SWAMI VIVEKANANDA'S MISSION

The life of Swami Vivekananda can be divided into three parts. The first part consisting of seven years was spent either in practising intense spiritual disciplines or in wandering all over India as a mendicant monk.

In July 1890 Swamiji (as Vivekananda is endearingly known among his followers) set out on a journey which took him all over India from the Himalayas to Kanyakumari, from Gujarat to East Bengal. He mingled with people belonging to all strata of society. Sometimes he ate the food cooked by a cobbler, shared the hookah with a sweeper, and sometimes he lived in palaces and held discussions with eminent statesmen. He could thus see the living India throbbing all over the subcontinent. These travels gave him first-hand knowledge of the socio-economic condition of the people and the cultural and historical forces operating in society. It was during these travels that he saw the real India, the India of paradoxes, with utter poverty on one side and highest spirituality on the other. His heart bled for the poor, and he began to think deeply how the downtrodden millions could be uplifted. He found the answer probably at the cape Kanyakumari. The answer was that he would spread Indian spirituality in the west which needed it, and in return, he would get the help of Western people for uplifting the poor.

Arise, awake, and do not stop until the goal is reached. - *Swami Vivekananda*

It was with this idea that Swami Vivekananda set sail for the United States of America in 1893.

The World's Parliament of Religions of 1893 held in Chicago was undoubtedly a turning point in the cultural history of the modern world. Swami Vivekananda's participation in the parliament of Religious and subsequent preaching work in the United states and England had a tremendous impact on the collective consciousness of the Indian Nation. Swami Vivekananda gave India its distinct cultural profile. He gave Indians pride in their spiritual heritage. He made India aware of her unique mission in the committee of nations.

It was through the parliament of Religions that the world discovered Swami Vivekananda. And after that the world had as much claim upon him as India had. His appearance at the parliament marked the beginning of his life as a World Teacher. Immediately after the parliament he plunged into his work of spreading the universal spiritual truths, travelling constantly and holding regular classes for nearly four years. Though one of the reasons for his going to the West was to collect money for his work in India, his unworldly nature prevented him from succeeding in the task. Instead, he acquired the wealth of love and support of a number of noble-hearted western people who gathered around him either as disciples or as admirers.

The main activities during the third part of Swami Vivekananda's life were awakening the collective consciousness of the Indian people through the series of lectures delivered from Colombo to Almora; founding of the Ramakrishna Mission and organizing relief operations; establishment of Ramakrishna monasticism on a firm foundation at the newly acquired site now known as Belur math.

Swami Vivekananda was only thirty years when he burst upon the world scene like a mighty avalanche. And he lived only for another nine years. During this short span of time he worked tirelessly for the welfare of the whole humanity, for spreading love and harmony among men, for establishing global understanding, co-operation and peace . His life was a sacrifice at the altar of love for mankind.

Incessant work and the strain of enormous intellectual creativity seriously affected Swamiji's health .On the 4th of July 1902 the imprisoned splendour of the spirit known to the world as Swami Vivekananda quietly left its cage of flesh and returned to its eternal abode disappearing from the moral vision like the golden rays of the sun showering countless blessings upon humanity.

Swami Vivekananda is not merely a historical figure, not merely a symbol of the past, but a living power working for the good of mankind. He himself said,

***It may be that I shall find it good to get outside mybody, to cast it off tike a worn – out garment. But I shall not cease to work. I shall inspire men everywhere until the world shall know that it is one with God.***

Swamiji's achievement which were crammed into a brief span of his last ten years were so varied and stupendous that it is not possible to comprehend them all or give even a brief account of them here. However, his interpretation of the basic and eternal truths of the spiritual world to the Modern Age enables us to have glimpse of his immense contributions to the world thought.

## SWAMI VIVEKANANDA'S NATIONALISTIC IDEAS

When Swami Vivekananda spoke in glowing terms about India either in the West or in the East he spoke only about the Indian culture and not about the Indian nation. By culture is meant the ideals and values that a nation has cherished for centuries. This point is to be kept in mind. Otherwise some of Swami Vivekananda's statements about India may appear as exaggerations to critics and scholars.

The stark reality of India as a nation in the late nineteenth century-exploited and humiliated by alien rulers, backward, with more than half the population utterly poor, illiterate and unawakened-was to haunt Swami Vivekananda all through his life. He saw that the main problems facing India were socio-economic.

Swami Vivekananda was the first leader to discover that the true cause of India's degradation was the neglect of the masses. Swamiji was a great student of history and he knew that the strength of the nation lay in the masses. Whereas in European countries socio-political changes had brought about great

The greatest sin is to think yourself weak. - *Swami Vivekananda*

transformations in the economic life of the masses, in India owing to the prevalence of the village system and caste, the masses had remained practically unchanged for the previous two or three thousand years.Kingdoms rose and fell, armies and marauding hordes came and went but the villagers of India remained unchanged,supplying steady revenues that supported the rise and growth of empires-Hindu, Muslim, British. Owing to social tyranny and neglect, the conscience of India had for centuries been suppressed and muffled; it was this forgotten conscience of India that found its expression when Swami Vivekananda said:

***I consider the great national sin is the neglect of the masses, and that is one of the causes of our downfall. No amount of politics would be of any avail until the masses in India are once more well educated, well fed and well cared for. They pay for our education, they build our temples, but in return they get kicks. They are practically our slaves. If we want to regenerate India, we must work for them.***

This was for the first time in the history of India that a great religious leader spoke for and worked for the masses. This may not seem to be a remarkable thing in modern times, but in those days when the leaders of society were busy with remarriage of widows, abolition of image worship and other issues of reform which concerned only the upper and middle class people, Swamiji's championing the cause of the poor and the downtrodden was indeed a revolutionary step. Long before the socialistic idea or exploitation of the poor by the upper classes was known in India, Swami Vivekananda had unraveled the intricate socio-economic processes that generated the wealth of the nation by exploiting the ignorance and helplessness of the poor.

It was not merely the backwardness of the masses that was the main obstacles to India's progress. Swamiji saw that the middle and upper classes in India were in a state of stupor, collective amnesia. Centuries of foreign domination had broken the self –will of the people, neutralized their self-respect, distorted their self-image and had taken away all initiative for self-improvement and concerted action. There was an overall feeling of weakness, helplessness and lack of national vigour. Swamii's message of strength came as a tonic to the soul of the nation which had been under social immobility for centuries.

Swamiji had not only correctly diagnosed the malady of the nation but suggested remedial measures and also practical application of these remedial measures.

**Education as the panacea for all evils**

Swamiji saw that what masses needed immediately was food, and it is not possible to produce enough food by following the primitive methods of agriculture and industry. Indians must master western science and technology. This could be done only thorough education

***As he writes:***

***I see it before my eyes, a nation is advanced in proportion to the education and intelligence spread among the masses***

Thus education, both spiritual and secular, according to Swamiji, must spread among the masses.

For those who are familiar with the drawbacks of the present system of education, this idea of Swamiji to bring about regeneration of India by the spread of education may appear to be rather impracticable or utopian. In fact this is one of the criticisms levelled against Swamiji's social views by some Soviet scholars who have made a penetrating study of Swamiji's works. But we have to keep in mind what Swamiji had in mind was not the present system of education. As he expressed it in the very second letter that he wrote from America to his disciples in Madras,

A hundred thousand men and women fired by the zeal of holiness, fortified by eternal faith in the Lord, and nerved to lion's courage with their sympathy for the poor and fallen and the downtrodden , will go over the length and breadth of the land, preaching the gospel of salvation, the gospel of equality.

Swamiji's idea was “to train preachers and teachers on a mass scale and send them rolling like irresistible waves all over the country.” Had this idea of massive spiritual and secular education been carried out.India's fate would have been different.

*Courtesy:* Youth Power and the Power of Ideas

***By Swami Bhajananda***

You cannot believe in God until you believe in yourself. - *Swami Vivekananda*

# EMERGING AS A HERO FROM THE STRUGGLE - NETAJI



Netaji Subhas Chandra Bose's life is a story of struggle. It is the story of a young dream that tells the saga of consciousness, struggle and success in every eye; one who has the power to rip the ground through his arms; one who talks about making a hole in the sky; one who is anxious to achieve his goals through his efforts; one who does not accept anything for free; and if he wants freedom, he is ready to spill his blood. Thousands of people sacrificed their lives on the one call of Netaji. He created an army against the British in no time. One slogan from him was engrossed in the sky -- Jai Hind.

Netaji was born in Cuttack in Odisha, graduated from Kolkata in Bengal, and proved his mettle to his enemies by becoming an ICS officer in Britain. But he was not accustomed to the life of comfort and amenities that came along with his job. He had to write a saga of struggle. He was a warrior, who had to wage the freedom struggle. Not only did he embrace the freedom movement wholeheartedly, but became an inspiration for freedom. With the slogan "Give me blood and I will give you freedom", he started preparing to awaken the country. Such was the charisma of his philosophy and personality that whoever listened to him was attracted to him. His popularity skyrocketed and he became the Netaji of the general public.

He was so fond of Bharat Mata that the country tied to the chains of slavery did not let him live peacefully. It was his love for the country that led to this miracle. People across the borders of the country also developed fascination for him. Heads of States of several important countries stood by him and Netaji lit the fire of freedom struggle outside the country also. He created a new force and presented that force before the enemies of the country as the Azad Hind Fauj (Indian National Army). He gave the slogan of "Dilli Chalo" with a new spirit and set his journey for the liberation of India.

"Success always stands on the pillar of failure." Subhas Chandra Bose lived with this philosophy and also inspired others with the same. Netaji encountered failures several times, but he converted those failures to a triumphant saga with his struggle. Whether it is municipal politics, the journey from the common Congressman to the Congress President, the formation of the Forward Block or the struggle of the Indian National Army, he passed the test with distinction.

In 1939 and thereafter, when the Congressmen and the Communists were not able to clear their stand on the independence of the country, Subhas Chandra Bose with the dream of freedom had become friends with Hitler, Mussolini, Tojo and Stalin. Not only did he establish "Azad Hind Fauj", he also formed the Azad (independent) Government on October 24, 1943. This new country also got recognition from nine countries, including Germany, Italy, Japan, Ireland, China, Korea and the Philippines.

Subhas Chandra Bose had a strong grip on English, Hindi, Bengali, Tamil, Telugu, Gujarati and Pashto languages. In the Azad Hind Fauj, he also interacted with the people of the entire country through these languages and also gave messages. Netaji's message to his colleagues was: "Success may be distant, but it is imperative". Subhas Chandra Bose used to say, "If a person is not obsessed, he can never become great. But he should also have something else inside him." Netaji was imprisoned 11 times in India. But he also displayed the 'mastery' of being released from captivity and the obsession to realize his goal by meeting top leaders of the world. Subhas Chandra Bose is credited with giving global identity to the Indian leadership. Earlier, Swami Vivekananda had enlightened the world of India's spiritual and cultural superiority and identity. That is why Swami Vivekananda's influence is seen in him. Subhas Chandra Bose never gave up reading the Gita.

Subhas Chandra Bose's struggle for freedom proved to be an inspiration not just for India, but for all the Third World countries. The freedom anthems were sung in three dozen Asian countries in the next 15 years after World War II. The Indian freedom struggle and the war of independence led by Subhas Chandra Bose had a profound impact on those countries. Netaji's status establishes him as the "hero of freedom" globally.

If you win, you can lead… If you loose, you can guide…" - *Swami Vivekananda*

As far as the history of India's independence struggle against the British is concerned Subhash Chandra Bose remains a key figure. A go-getter right from the start, Bose decided to chart his own path towards India's independence in spite of knowing how hard it was going to be. Netaji, without a shadow of a doubt, remains one of the most key figures in the history of India's independence. He played a crucial role in freeing the country from the clutches of 200 years of British rule in his own inimitable way, much like the other leading lights of the day such as Mahatma Gandhi and Jawaharlal Nehru. Till the last day of his life as an active freedom fighter, he kept the spirit of fighting the British – even at the time of his death he was planning to migrate to Russia and find a new way to combat the British – and it is this persistence and patriotic fervour that needs to be respected more than anything else.

Abandoning a life of ample wealth and stupendous comfort, he dedicated his life to his nation and resorted to whatever means necessary to secure its freedom from British colonial rule. A stark contrast from Gandhi's pacifism and Nehru's diplomacy, Netaji stood for the idea of fighting till the last breath. His war-cry of "You give me blood, I'll give you Freedom" is still a popular booster for the troops today.

*Sourced from net*

# பாரதியார் நினைவு நூற்றாண்டு விழா - 11.12.2021

கோவை R.S. புரம் பாரதீய வித்யா பவன் பள்ளியில் 11.12.2021 சனிக்கிழமை அன்று பாரதியார் நினைவு நூற்றாண்டு விழாவும் நண்பனாய், மந்திரியாய்,நல்லாசிரியனுமாய் என்னும் தலைப்பில் பாரதிக்கு உதவியவர்கள் பற்றிய நூல் வெளியீட்டு விழாவும் இனிதே நடைபெற்றது .

கோவை R.S. புரம் பாரதீய வித்யா பவன் பள்ளியின் தலைவர் B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த சான்றோர்களையும், ஆன்றோர்களையும், மாணவர்களையும் வரவேற்றுப் பேசுகையில் புற மேம்பாட்டைத் தருவது அல்ல கல்வி, அகமேம்பாட்டைத் தருவதே கல்வி. பாரதிக்கு உதவியவர்களை மட்டுமே இநநூல் பேசுகிறது. பாரதியைப் பற்றி வெறுமனே பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. இன்றைய இளைஞர்கள் மத்தியில் பாரதியைக் கொண்டுபோய்ச் சேர்த்தல் நம் ஒவ்வொருவரின் கடமை, அவ்வாறு நாம் செய்துவிட்டால் இளைஞர்களுக்குத் தனியே ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சி தேவையில்லை. யார் யாரையோ கொண்டாடும் தேசம் பாரதியை இன்னும் அதிகம் கொண்டாட வேண்டும் என்று பேசினார் .

புத்தக அறிமுக உரை வழங்கிய நூலின் ஆசிரியர் முனைவர் ஐ.கே.எஸ் அவர்கள் தனது உரையில் பாரதிக்கு உதவியவர்கள் என்னும் தலைப்பில், காசும், பருப்பும், சோறும் இல்லாத பாரதிக்கு வந்த உறவினரை உபசரிக்க உதவியவர் அம்மாக்கண்ணு என்றும் ஒன்றுமே இல்லாத நேரத்தில் உதவியவர் சுந்தரேசய்யர் என்றும் கூறி இது மாதிரியான செய்திகளின் தொகுப்பே நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் என்னும் இந்நூல் என்று தன் நூலை அறிமுகம் செய்து பேசினார்.

முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம் அவர்களுக்குப் பவனின் பொருளாளர் திரு. எம். அழகிரிசாமி அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச்செய்தார்.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய சொல்லேருழவர் பாரதீய வித்யா பவன் கோவை மையத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் கவிஞர் முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமை உரை வழங்கினார் .

அவர் தமது உரையில் 83 ஆண்டுகளுக்கு முன்பு உன்னத இலட்சியத்தோடு தொடங்கி இந்திய நாட்டின் பண்பாட்டுக் களஞ்சியங்களை மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி வருவதே உலகம் தழுவிய பவன் கல்வி குழுமத்தின் நோக்கம். அதிலும் R.S. புரத்தில் அமைந்துள்ள பவன் பள்ளியில் கல்வியைக் கசடற கற்று கொடுப்பதோடு எண்ணற்ற கலை இலக்கிய இசை நிகழ்ச்சிகளை நடத்திவந்தாலும் பாட்டுக்கொரு புலவனாம் பாரதியை பற்றிய இந்நூல் வெளியீட்டு விழா ஓர் இனிய விழா என்று கூறினார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து திரு. வி.பி. தண்டாயுதம் அவர்கள் விழாவின் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து விழாவின் சிறப்பு விருந்தினர் திருமதி. மீனாட்சி பாரதி அவர்களுக்கு திரு. B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் பாரதியர் படம் மற்றும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பு செய்தார்

அடுத்து தமிழகம் அறிந்த நாவலர், பாரதியாரின் தோழர், தமிழறிஞருமான சோமசுந்தரப் பாரதியின் கொள்ளுப் பேத்தி திருமதி. மீனாட்சி பாரதி அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

அவர் பேசுகையில் கண்ணைத் திறந்து எண்ணிப்பார்த்தால் எட்டுப் பேர் உட்கார்ந்து இருந்தனர். ஆனால் கண்ணை மூடிக் காதைத் திறந்தால் ஒற்றைக் குரல்தான் எனக்குக் கேட்டது என்று பவன் மாணவிகளின் பாடும் திறனை வெகுவாகப் பாராட்டினார் .

ஒரு வாழ்க்கையை முழுமையடையச் செய்வது குடும்பநிலை என்றும், அதில் பெண்கள் குறுகிப் போகாது சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்" கொண்ட தமிழ்நாடு என்று வள்ளுவரின் சிறப்பையும் வள்ளுவரால் தமிழ்நாடு பெற்ற சிறப்பையும் எடுத்துக் கூறினார் .

மேலும், நூலைப் பற்றிக் கூறுகையில் நூலின் அட்டையில் உள்ள நிலாவும், பாரதியின் தோற்றமும் நம்மை உள் நுழையத் தூண்டுகிறது என்றார்.

தொடர்ந்து நூல் பற்றிப் பேசுகையில் பாரதிக்கு உதவியவர்கள் என்ற தலைப்பிலே பாரதிக்கு நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் விளங்கியவர்களைக் குறித்த ஒரு தொகுப்பே இம்மிகச்சிறந்த நூல் எனக் கூறியதோடு பாரதியின் முரட்டுத் தனம், அலட்சியம் கொண்ட தோற்றம் முறுக்கு மீசையும், முண்டாசையும் பற்றிப் பேசியவர்கள் அதிகம். ஆனால் பாரதியின் கண்கள் பற்றி பேசியவர்கள் மிகக் குறைவு. இந்த அட்டைப் படத்தில் உள்ள பாரதியின் கண்களில் ஒரு தேடல் தெரிகிறது. அதுவும் அந்தக் கண்கள் கீழ்நோக்கிப் பார்க்கவில்லை, மேல்நோக்கிப் பார்க்கிறது. அந்தப் பார்வை என் வாழ்க்கையில் நண்பனாய், நல்லாசிரியனுமாய் இருந்தவர்கள் யார்? யார்? என்று பார்ப்பதாகக் கூறித் தன் உரையை நிறைவு செய்தார்.

All power is within you; you can do anything and everything. - *Swami Vivekananda*









தொடர்ந்து விழாவின் மைய நிகழ்வாக நூல் வெளியீடு நடைபெற்றது. முனைவர் ஐ.கே.எஸ் அவர்கள் எழுதிய நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் என்னும் புத்தகத்தை பாரதீய வித்யா பவன் கோவை மையத்தின் தலைவர் திரு. பி. கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் வெளியிட

கம்பன் கழகம் – திரு ஆர்.ஆர்.பாலசுந்தரம்

நன்னெறிக் கழகம் – திரு .எம். மாணிக்கம்

கோயம்புத்தூர் திருப்பாவைக் கழகம் – திரு டி. பாலசுந்தரம்

திரு நெறியத் தமிழ் மன்றம் – திரு. எஸ். வெங்கடாசலம்

தமிழ்நாடு இலக்கியப் பேரவை திரு. திராவிட மணி

விஜயா பதிப்பகம் – திரு. எம் .வேலாயுதம்

விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் – திரு.எஸ் . நடராசன்

ஆகியோர் புத்தகத்தின் முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டனர் .

முண்டாசுக் கவிஞன் முடிவேதும் இல்லா முத்தமிழ் ஆசானாம் பாரதியின் நினைவு நூற்றாண்டினை முன்னிட்டு எப்போதும் தன் செய்கையினால் தனித்துவமும் புதுமையும் காட்டும் இலக்கிய, இசை கலைகளை வளர்க்கும் வாழிடமாய் திகழும் பவனம் தமிழக வரலாற்றில் முதன்முறையாக என பெருமை கொள்ளும் நிகழ்வு ஒன்று அரங்கேறியது. தமிழ் கவிதைகளால் நாட்டுப்பற்றை நம் மனதில் ஊற்றிய நல்ல நாயகன் பாரதியின் நினைவு நூற்றாண்டு நன்னாளில் “உளி விழும் எல்லா கற்களும் சிற்பமாவதில்லை” அதுபோல் தமிழைக் கற்றுத்தரும் எல்லா தமிழ் ஆசிரியர்களுக்கும் கிடைக்காத ஒரு பெருமையை R.S. புரம் மற்றும் அஜ்ஜனூர் பவன் பள்ளியில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களுக்கு பாரதியின் நூற்றாண்டு விழாவில் பாரதீய வித்யா பவனின் தலைவர் Dr. B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் பாரதி படமும் சிறப்பு விருந்தினர் திருமதி. மீனாட்சி பாரதி அவர்கள் பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தார்கள்.

உளியில் செதுக்கினாலும் வலியைத் தாங்கித் கொள்வோமே தவிர தமிழ் மொழியை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். எங்கள் கடைசி முச்சு உள்ளவரை தமிழ் மொழியை சுவாசிப்போம். தமிழையே நேசிப்போம் என்று பாரதீய வித்யா பவன் R.S. புரம் பள்ளியின் தமிழாசிரியர் வெ. மங்கையர்க்கரசி மற்றும் அஜ்ஜனூர் பள்ளியின் தமிழாசிரியர் சத்யப்பிரியா ஆகியோர் ஏற்புரை வழங்கினர்.

கோவை R.S. புரம் பாரதீய வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றும் செ.தமிழ்செல்வன் நன்றியுரை வழங்கியதும். நாட்டுப் பண் பாட விழா இனிதே நிறைவுற்றது.

Talk to yourself once in a day.. otherwise you may miss meeting an excellent person in this world. - *Swami Vivekananda*

## EVENTS & HAPPENINGS AT CBSE SCHOOL

**Family Icon Day**

“Families are like branches on a tree, which grows in different directions, yet the roots remain the same”.

Bharatiya Vidya Bhavan Public School celebrated 'Virtual Family Icon Day' on 09.12.2021, Thursday. The students dressed up as their favourite family member and spoke a few words about them. Children enjoyed enacting the member of the family. This day highlights the importance of families as a basic unit of society and the importance of family members being Role Models.

**Report on Thiththikkum Tamil Day**



Bharatiya Vidya Bhavan Public School students were introduced to **“தித்திக்கும் தமிழ்”** on 16th December 2021, on the first day of the holy month of Margazhi. This day is dedicated to our Murukku Meesai Bharathiyar as his birth anniversary falls on the same month. Children were taught about the significance of Tamil language and Bharatiyar song 'Oodi Vilaiyadu Pappa'. Children participated happily and learnt the song.

**Christmas Celebration**

Christmas celebration was organized virtually on 24th December, 2021. Students appeared in beautiful dresses and could notice the excitement of Christmas in their eyes. Students were welcomed by Jingle Bells and they made colourful stars. Tiny tots enjoyed doing activities and wished their friends "Merry Christmas".



## EVENTS & HAPPENINGS AT R.S.PURAM SCHOOL

**VSC INAUGURATION**

The inaugural ceremony of VSC for the academic year was organized on 25.11.2021. Volunteers of VSC shared their memories of visiting old age homes, orphanages and the competitions and the activities that were conducted in the past years. A documentary was presented that depicted the life of Swami Vivekananda, his Chicago speech and all the struggles he underwent. It also showed how he inspired great leaders like Subhash Chandra Bose, Gandhiji, Ravindranath Tagore and many more. The distribution of books and badges to the newly recruited volunteers of VSC were given by the Chief guest Shri.V.Prabhakar Rao and Joint Secretary Shri.Suriyanarayan C R. The Chief guest in his speech quoted how Lord Krishna motivated Arjuna to fight Kurukshethra war and that inspired Swami Vivekananda give his clarion call to arise, awake and march towards a purposeful god. The students took oath to follow the trails of Swami Vivekananda and confirmed their thoughts & determination by singing Manidha nee.... Song



**HE ORIENTATION – 04.12.2021**

The Human Excellence Orientation on the topic 'How to develop positive thinking?' made everyone to realize self dependency on all situations; facing challenges in a positive manner. The examples



quoted i.e Eagle and lion – their features were really interesting and motivated towards positivity.

**Christmas Celebration – 24.12.2021**

The day 23.12.2021 witnessed the last celebration of the year 2021 – Chirstmas, and New Year celebrations. The Program started with the beautiful rendition of prayer song by Smt.Flany Jose. Ms.Mary Elizabeth welcomed the gathering. The importance of celebrating Christmas and message of Jesus Christ to the World was delivered as speeches by Students Selvi. Bhagayalakshmi, Selvi. Shreenithi and Selvi. Madumitha. A Tamil poem was presented by Shri. Tamilselvan and the teachers presented the audience with enthralled singing of carols. A joyful dance by Tejasree and Anushka and also the much awaited entry of Santa brought cheers to the gathering. The Registrar in his address greeted the students and the teachers for their wonderful performance and also elaborated how people throng the streets of Jerusalem to pay their obeisance to Jesus Christ and the place where he was crucified. The Principal greeted the students and the teachers a happy joyful and healthy new year.





## EVENTS & HAPPENINGS AT AJJANUR MATRICULATION SCHOOL

**Report on Eco Club Inauguration**

Eco club inauguration was held on December 4th 2021. A few saplings were planted and various competitions were conducted in connection with Eco-club activities. Cultural Programmes were organized.



**Report on Christmas Celebration**

Christmas celebration was organized on 24 December 2021. The celebration was held in the school stage which was beautifully decorated and a crib was made by the teachers. All the students were very excited and full of enthusiasm for the celebration.

The celebration began with prayer continued by the various other programs. One of which was a performance, where a group of primary children presented a beautiful play on the theme of Christmas. A child disguised as Santa Claus paraded through the stage cheering, dancing and singing songs of Christmas. The program ended with the song of Jingle bells.



We are what our thoughts have made us; So take care about what you think. Words are secondary. Thoughts live; They travel far. - *Swami Vivekananda*

# வ.உ. சிதம்பரனார்



இந்தியாவின் முதல் சுதேசிக்கப்பல், முதல் தொழிலாளர் உரிமைக்கான வேலை நிறுத்தம், முதல் தொழிற் சங்கம் என இன்று நாம் கனவு காணும் 'சுயசார்பு இந்தியா' வின் முன்னோடித் தமிழராக புரட்சி செய்த வ.உ.சிதம்பரனாரின் 150 வது பிறந்த வருடம் இது.

வ.உ.சிதம்பரம்பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் "செத்த பிணம் உயிர் பெற்று எழும்.'' புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும். 1908ஆம் ஆண்டு சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்த தீர்ப்பில் நீதிபதி ஃபின்ஹே எழுதியுள்ள வரிகள்தான் இவை. வ.உ.சி.யின் தன்னலமற்ற விடுதலை உணர்வுக்கும், அவரின் தியாக வாழ்க்கைக்கும் இந்த வார்த்தைகளை விடவும் பெரிய சான்றிதழ் எதுவும் தேவையில்லை.

**சாமானியர்களை விடுதலைபோராட்டத்திற்கு ஈர்த்த காந்தக்குரல்:**

1872ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாளுக்கு மூத்த மகனாக பிறந்தவர் வ.உ.சி. இவரது தந்தை உலகநாத பிள்ளை தமிழகத்தின் புகழ்பெற்ற வழக்கறிஞர், இதனால் சிறுவயது முதலே செல்வசெழிப்புடன் வளர்ந்தார். இளம் வயதிலேயே தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நற்புலமை பெற்ற வ.உ.சி, தந்தையின் வழியில் வழக்கறிஞராகவும் படித்து தேர்ச்சி பெற்றார். பின்னர் வழக்கறிஞர் தொழிலில் புகழுடன், பெரும் செல்வத்தையும் ஈட்டினார், ஏழைகளுக்காக இலவசமாகவும் வாதாடினார். பாலகங்காதர திலகரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு சுதந்திர போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட வ.உ.சிக்கு பாரதியார், சசி மகராஜ் ராமகிருஷ்ணானந்தர், சுப்ரமணிய சிவா ஆகியோர் நல்ல நண்பர்களாக இருந்தனர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பொருட்செறிவுடன் காந்தக்குரலுடன் கம்பீர உரையாற்றும் வ.சி.சிதம்பரனாரின் குரல்முழக்கம் பல்லாயிரக்கணக்கான சாமானிய மக்களுக்கு விடுதலை உணர்வையூட்டியது. வ.உ.சி. புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கியதாலும், இவரின் கருத்தாழமிக்க பேச்சாலும் தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் மக்கள் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கினார். மக்களிடம் விடுதலை உணர்வு, சுதேசி உணர்வு, தொழிற்சங்க உணர்வினை ஏற்படுத்த "சுதேசி பிரச்சார சபை", "தர்ம சங்க நெசவு சாலை", "தூத்துக்குடி கைத்தொழில் சங்கம்", "சுதேசிய பண்டக சாலை", "வேளாண் சங்கம்" போன்றவற்றை ஏற்படுத்தினார்.

**சுதந்திர உணர்வை தட்டியெழுப்பிய சுதேசிக்கப்பல்:**

ஒரு நாடோ, ஒரு இனமோ அடிமையாக காரணமே வணிகம்தான், இந்தியாவில் அனைத்து தொழில்களும் ஆங்கிலேயர்களின் வசமே இருந்தது. இதனை உணர்ந்த சிதம்பரனார், தனது சொத்துக்கள் முழுமையும் விற்று, இந்தியா முழுவதும் 40 ஆயிரம் பங்குதாரர்களை உருவாக்கி சுமார் 10 இலட்சம் மதிப்பில் "சுதேசி ஸ்டீம் நேவிகேஷன்" என்னும் நிறுவனத்தை உருவாக்கினார். இதன் தலைவராக வள்ளல் பாண்டித்துரை தேவர் இருந்தார். ஆங்கிலேயர்களின் முக்கிய கப்பல் தடமாக விளங்கிய தூத்துக்குடிக்கும், கொழும்புவுக்கும் இடையே பல்வேறு



அச்சுறுத்தல்களை தாண்டி இந்தியாவின் முதல் ''சுதேசி கப்பலை" இயக்கினார்.

வ.உ.சி. அவர்கள் வாங்கிய எஸ்.எஸ்.காலியா, எஸ்.எஸ். லாவோ கப்பல்களில் 42 முதல் வகுப்புகள், 24 இரண்டாம் வகுப்புகள், 1300 சாதாரண வகுப்புகள் என மொத்தம் 1366 இருக்கைகளும், 4000 டன் சரக்கு மூட்டைகள் ஏற்றும் வசதிகளுடன் இருந்தது. தூத்துக்குடியில் இருந்து கொழும்புவிற்கு 4 அணா கட்டணம் மட்டுமே சுதேசி கப்பலில் வசூலிக்கப் பட்டது. ஆனால் ஆங்கிலக் கம்பெனியோ 4 ரூபாய் வசூலித்தது. மேலும் சரக்கு மூட்டைகளுக்கும், லக்கேஜுக்கும் தனிக்கட்டணமும் வசூலித்தது.

கட்டணம் மிகக் குறைவாக இருந்ததாலும், சுதேசிக் கப்பல் என்று மக்கள் கருதியால் சுதேசிக் கப்பலுக்கு மகத்தான ஆதரவளித்தனர். சிதம்பரனாரின் சுதேசிக்கப்பலை அப்போது நாடே கொண்டாடியது, அனைத்து இந்திய பத்திரிகைகளும் கொண்டாடி தீர்த்தது, இந்திய விடுதலைப்போராட்ட வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையாக இந்த சுதேசி கப்பல் விளங்கியது.

**இந்தியாவின் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தம்:**

ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் தொழிற்சங்கங்கள் இல்லை, தொழிலாளர் உரிமை என்ற வார்த்தை பிரயோகமே இல்லை. எனவே அனைத்து தொழிற்சாலைகளிலும் 12 மணி நேர வேலை, விடுமுறையே இல்லாத பணி, மிகக்குறைந்த கூலி என தொழிலாளர்களின் நிலை பரிதாபகரமானதாக இருந்தது. ஏழை, எளிய மக்களுக்காக இலவசமாகவே வழக்காடினார் சிதம்பரனார்,

ஏழைத்தொழிலாளர்களின் உரிமைகளை மீட்கவும் தலைப்பட்டார். இதன்காரணமாக 1908 ஆம் ஆண்டு தூத்துக்குடி கோரல் நூற்பாலை ஊழியர்கள் மத்தியில் இவரும், சுப்ரமணிய சிவாவும் பிப்ரவரி 23ஆம் தேதி உரையாற்றினார்கள், இவர்கள் உரைவீச்சின் எழுச்சியாக பிப்ரவரி 27 முதல் இந்த தொழிற்சாலை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டக்காலத்தில் ஊழியர்களுக்கான வாழ்வாதாரத்துக்கு வ.உ.சி தனது சொத்த பணத்தை கொண்டு உதவி செய்தார். பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு இடையிலும் நாளுக்குநாள் வீரியமடைந்த இந்த போராட்டத்திற்கு பணிந்த ஆங்கிலேய அரசு தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றது. எட்டு மணிநேர வேலை, ஞாயிற்றுகிழமை விடுமுறை, ஊதிய உயர்வு ஆகிய ஊழியர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தொழிற்சங்கங்களே இல்லாத அப்போதைய இந்தியாவில் தொழிலாளர்களைஅணிதிரட்டி போராடி உரிமைகளை வென்றெடுத்த கோரல் போராட்டம், இந்திய நாட்டையே திரும்பிப்பார்க்க வைத்தது. இந்திய தொழிற்சங்க வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக அமைந்த இப்போராட்டத்திற்கு பிறகு பல்வேறு நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கான உரிமைகளை வழங்கியது, அதன்பின்னர் 1920 களில்தான் இந்தியாவில் தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

**சிறையில் தள்ளிய சுதேசிக்கப்பல்:**

சிதம்பரனாரின் சுதேசி கப்பல் பெரும் வெற்றியை பெற்றதால், ஆங்கிலேய கப்பல் நிறுவனம் பெரும் நஷ்டத்தை சந்தித்தது.

Take up one idea, make that one idea your life. Think of it, dream of it, Live on that idea let the brain, muscles, nerves, every part of your body be full of that idea, and just leave every other idea alone. This is the way to success. - *Swami Vivekananda*

மேலும் சுதேசி கப்பல், தொழிற்சங்கங்கள் என வ.உ.சியின் விடுதலைப்போராட்ட அதிரடி முன்னெடுப்புகள் ஆங்கில அரசாங்கத்தை ஆட்டம் காண செய்தது. எனவே அவரை பழிதீர்க்க வன்மத்துடன் காத்திருந்தது ஆங்கில அரசு. இந்த நேரத்தில் விடுதலை போராட்ட வீரர் பிபின் சந்திரபாலின் விடுதலையை கொண்டாட ஆங்கிலேய அரசு தடை விதித்து இருந்தது.

அதனை மீறி 09.03.1908ம் தேதியில் தூத்துக்குடியில் சுமார் 20000 மக்கள் கூடிய பொதுக்கூட்டத்தில் வ.உ.சி பேசினார். இதனைத்தொடர்ந்து 12.03.1908 சிதம்பரனார் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். வ.உ.சி. கைது செய்யப்பட்டதை அறிந்தவுடன் மக்கள் கொந்தளித்தனர். திருநெல்வேலியில் கடைகள் அடைக்கப்பட்டன. போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பள்ளி, கல்லூரிகள், மண்ணெண்ணெய்க் கிடங்குகள், அஞ்சல் நிலையம், காவல்நிலையம், நகராட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டது. தூத்துக்குடியிலும் கோரல் நூற்பாலை மற்றும் "பெஸ்ட் அண்ட் கம்பெனி" தொழிலாளர்கள் வேலை நிறுத்ததில் ஈடுபட்டனர், நகரில் பந்த் அறிவிக்கப்பட்டது. இந்த போராட்டங்களின்போது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானார்கள். இதுவே இந்தியாவில் முதல் அரசியல் வேலை நிறுத்தம். இந்த வழக்கில் சிதம்பரனாருக்கு முதலில் 40 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது, நாட்டையே கொந்தளிப்பில் ஆழ்த்திய இந்த தீர்ப்புக்கு எதிர்ப்பு வலுத்தது, அதன்பின்னர் மேல்முறையீட்டில் தண்டனைக்காலம் 10 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

**சிறைக்கொட்டடியும், சுதேசிக்கப்பல் விழ்ச்சியும்:**

இளம்வயது முதலே செல்வ செழிப்புடன் வாழ்ந்த சிதம்பரனார் சிறைக்கொட்டடியில் பெரும் துன்பங்களை சந்தித்தார். மாடுகள் இழுக்கும் செக்கினை இவர் இழுத்தார், கல் உடைத்தார், கடுமையான வேலைகளை செய்யவைக்கப்பட்டார், இதனால் சிதம்பரனாரின் உடல்நிலை மிகவும் நலிவுற்றது.

உடல் நலிவுடன் சேர்த்து மனம் நலிவுறும் வண்ணம் மற்றொரு அதிர்ச்சியையும் வ.உ.சி சந்தித்தார். சுதேசி கப்பல் ஓராண்டு புள்ளி விவரப்படி லாவோ கப்பல் 115 பயணங்களில் 29773 பேர் பயணித்ததாகவும், காலியா கப்பல் 22 பயணங்களில் 2150 பேர் பயணித்ததாகவும் புள்ளிவிபரங்கள் வெளியாகின. பெரும் இலாபத்துடன் இயங்கிய சுதேசி கப்பலை முடக்க 24.07.1908 அன்று நடுக்கடலில் வேறொரு கப்பலில் மோதிய வழக்கை கையில் எடுத்தது. இதனால் சுதேசி கப்பல் நிர்வாகிகள் அச்சமடைந்தனர். வ. உ.சி சிறையில் இருந்த போது சுதேசி கப்பல் நிர்வாகிகள் பயந்து போட்டியை சமாளிக்க முடியவில்லை என்று இரண்டு கப்பலையும் விற்றுவிட்டனர். இதில் எஸ்.எஸ்.காலியா கப்பலை வெள்ளையருக்கே விற்றுவிட்டனர், இதனை அறிந்து உள்ளம் குமுறினார் சிதம்பரனார். "மானம் பெரிதென கருதாமல் வெள்ளையனிடமே விற்றதற்கு பதிலாக அந்தக் கப்பலை உடைத்து நொறுக்கி வங்கக் கடலில் வீசியிருக்கலாம்" என கொந்தளித்தார்.

1912 ஆம் ஆண்டு விடுதலை அடைந்தபோது சிதம்பரனாரின் வழக்கறிஞர் உரிமம் பறிக்கப்பட்டது, இதனால் அவரால் வழக்கறிஞர் தொழில் செய்ய இயலவில்லை. சுதேசி கப்பல், தொழிற்சங்க பணிகளுக்காக சொத்துக்களையும், பொருளையும் இழந்துவிட்டதால் வறுமையின் பிடியில் சிக்கினார். பிறகு சென்னைக்கு சென்று மண்ணெண்ணெய் வியாபாரம் செய்து தோல்வியடைந்தார், பின்னர் அவருக்கு ஈ.எச்.வாலஸ் என்ற ஆங்கிலேய அதிகாரி வழக்கறிஞர் உரிமத்தை திரும்ப தந்தார், இதன் நன்றி கடனாக தனது கடைசி மகனுக்கு 'வாலேஸ்வரன்' என்று பெயர்சூட்டினார். 1924 ஆம் ஆண்டுக்கு பிறகு கோவில்பட்டி, தூத்துக்குடியில் வழக்கறிஞராக பணியாற்றினார். 1912 இல் விடுதலையான பிறகு சென்னை, கோவை உள்ளிட்ட தமிழக நகரங்களில் பலவேறு தொழிற்சங்கங்களை உருவாக்கினார் வ.உ.சி.

விடுதலை போராட்ட வீரராக மட்டுமின்றி சிறந்த தமிழ் நூலாசிரியராகவும் இவர் இருந்தார். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, என் சுயசரிதை, இன்னிலை உரை, சிவஞானபோதம் உரை, திருக்குறள் உரை ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார். பல ஆங்கில நூல்களையும் தமிழில் மொழிப்பெயர்த்திருக்கிறார். விவேகபானு, இந்து நேசன், தி நேஷனல் போன்ற பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணியாற்றினார் சிதம்பரனார். 1912இல் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு உடல் நலிவு, பொருளாதார நலிவில் சிக்கிய சிதம்பரனாருக்கு திலகர் மாதம் 50 ரூபாய் நிதி அனுப்பினார் என்பது கண்ணீரை வரவழைக்கும் செய்தி. சுயசார்புடன் தனது சொத்துக்களை விற்று இந்தியாவுக்கென முதல் சுதேசிக்கப்பலை கட்டிய வ.உ.சி, கடைசிகாலத்தில் வறுமையுடன் உழன்று 1936 நவம்பர் 18 ஆம் தேதி உயிரிழந்தார்.

# பாவை நோன்பு

தமிழ் மொழியில் பாவைப் பிரபந்தங்கள் ஐந்துள்ளன. அவை 1.மணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை 2.ஆண்டாள் அருளிய திருப்பாவை 3.சமண முனிவர் அருளிய பாவை 4.தத்துவராய சுவாமிகள் அருளிய பாவை இரண்டு. சுமண முனிவர் அருளிய பாவை முழுநூல் கிடைக்கவில்லை.

திருவெம்பாவை என்பது சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமானைக் குறித்து எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டது. முதல் எட்டு பாடல்கள் சிவபெருமானின் புகழ்களைப் பாடியபடி நீராடச் செல்லுதலைக் குறிக்கும்.ஒன்பதாவது பாடல் சிவபெருமானிடம் தங்கள் வேண்டுதல்களைக் கூறுகிறது. பத்தாவது பாடல் நீராடுதலையும் குறிக்கின்றன. திருவெம்பாவைக்குச் சிறப்பாக விளங்குவது "எம்பாவாய்" என்னும் தொடர்மொழி ஆகும். சிவசக்தியின் அருட்செயலையும் நவசக்திகள் ஒன்றுசேர்ந்து சிவபெருமானைத் துதிப்பதும் திருவெம்பாவையின் தத்துவமாகும்.

திருப்பாவை வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தின் 473 முதல் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவை ஆகும். தமிழகத்தின் பழமையான விரதங்களில் ஒன்றாகும். நாடு செழிக்க நல்ல மழை பெய்ய வேண்டும் என்றும்நல்ல கணவன் அமைய வேண்டும் என்பதற்காக கடை பிடிக்கும் விரதமாகும். இந்த விரதம் தைநீராடல் என்றபெயரால் அழைக்கப்பட்டது. நீராடுதல் தவமெனக் கருதப்படும். புற அழுக்கை நீக்குவது நீர் நம் அக அழுக்கை நீக்குவது இறைவன் திருநாமம்.

இளமை நோன்பில் மனதை நன்கு வைத்துக் கொண்டால் உடல் நலமாக இருக்கலாம்.

உடல் பிறக்கிறது வளர்கிறது நோய்வாய்ப்படுகிறது. ஆனால் உள்ளம் எந்நாளும் இளமையாக இருக்கலாம். உள்ளத்தைப் பண்பட்ட நிலையில் வைத்திருந்தால் தளர்வும் சோர்வும் சலிப்பும் இளமையைப் போக்கி முதுமையைத் தரும். உறுதியும் ஊக்கமும் உழைப்பும் இளமையைப் பாதுகாக்கின்றன.

பாவை நோன்பில் காலையில் சுறுசுறுப்பாய் எழுந்து இறைவனைத் தொழுது பின் கடைமைகளை ஆற்றும் போது உள்ளம் மகிழ்ந்து வேலையில் மனம் முழுமையாக ஈடுபடுகிறது. மார்கழி மாதம் திருப்பாவைதிருவெம்பாவை பாடி உயர்வு பெறுவோம்.



# புதிய ஆரம்பம் 2022

பழையவைகள் ஒழியட்டும்
புதியவைகள் பிறக்கட்டும்
இருள் விலகி, ஒளி உதிக்கட்டும்
தீமைகள் நன்மைகளாகட்டும்
தோல்விகள் தொலையட்டும்
வெற்றிகள் வேர் வைக்கட்டும்
உடலும் உள்ளமும் ஆரோக்கியம் பெறட்டும்

என்ற வரிகளோடு இந்தப் புத்தாண்டில் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த பேரின்பம்.

கடந்து போன இரண்டு ஆண்டுகள் நம்மை அழவைத்தது. நம் ஆனந்தத்தை அழித்துப் போட்டது. எத்தனையோ மனிதர்கள் மரித்துப் போயினர், அனாதைகளாயினர். தம் உடைமைகளையும் , உறவினர்களையும், நண்பர்களையும் இழந்து போயினர் என்பது உண்மைதான், என்றாலும்

நீங்களும், நானும் உயிருடன் இருப்பது ஓர் புதிய ஆரம்பத்தைக் காண்பதற்கே என்பதை நாம் மறந்து போகக்கூடாது.

இறந்தவர்களை நினைத்தோ, இழந்தவைகளை நினைத்தோ அழுது கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும். இனி நடப்பவைகள் நன்மைகளாகவே இருக்கும் .

சென்று போன இரண்டு ஆண்டுகளில் எந்த நாளும் நமக்கு விடியாதது போலவே இருந்தாலும் இனிவரும் எல்லா நாட்களையும் நாம் விடியலாகவே பார்க்கப் போகிறோம். வாழ்நாளில் நேற்று என்பது பயனற்ற ஓர் நாள். அது கிழித்து எறியப்படட்டும். அல்லது தீ வைத்து எரிக்கப்படட்டும் இனிவரும் நாட்களில் புதிதாய்ப் பிறந்த குழந்தையின் புதிய பிறப்பும் புதிய வளர்ப்பும், புதிய சிந்தையும் புதிய பலனும் புதியதாய் ஆரம்பமாகட்டும்.

புதிய ஆரம்பம் என்பது நம் எழுத்திலோ, நம் சொல்லிலோ அல்ல. அது நாம் செய்யும் ஒவ்வொரு செயலில்தான் உள்ளது.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரு புத்தகம். அவன் வாழும் ஒவ்வொரு நாளும் அப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கங்கள். தனக்கும், தன் குடும்பத்திற்கும், தான் வாழும் சமூகத்திற்கும் பயனில்லாத செயல்களைச் செய்யும் நாட்கள் வெறும் பக்கங்களாகவே இருக்கும். அவைகள் கிறுக்கப்படுமே தவிர வாசிக்கப்படமாட்டாது. உங்கள் வாழ்க்கை என்னும் புத்தகம் மற்றவர்களால் வாசிக்கப்பட ஒவ்வொரு நாளும் நாம் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்.

சாதிக்கிற ஆண்டும், ஓர் புதிய ஆரம்பமும் வேண்டுமெனில் நமக்கு நல்ல மாதங்கள் தேவை. நல்ல மாதங்களுக்கு வாரங்களே அடித்தளம். வாரங்களுக்கு நற்செயல் செய்யும் நாட்களே முகவரி. அத்தகைய நாட்களை நட்சத்திரங்களைச் சேகரிக்கும் வானம் போல நாம் சேகரிப்போம். நம்பிக்கையோடு புதிய ஆரம்பத்தைத் தொடங்குவோம் .

அமெரிக்காவின் முன்னால் அதிபர் ஆபிரகாம் லிங்கன் சிறந்த மேடைப் பேச்சாளர் என்பது நாம் அறிந்ததே. அவரது பேச்சினை வியந்து கேட்ட ஒரு இளைஞன். ஐயா! கடந்த அரைமணி நேரம் எப்படி உங்களால் இவ்வளவு அற்புதமாகப் பேச முடிந்தது என்று கேட்டார். அதற்கு ஆபிரகாம் லிங்கன் சொன்னார் கடந்த அரைமணி நேரம் தான் நீ என்னைப் பார்த்தாய் அதற்காக ஆறு நாட்களாய்த் தயாரானதை நீ பார்க்கவில்லையே என்று கூறியதோடு ஒலிம்பிக் மைதானத்தில் வெற்றி பெறும் ஒரு வீரனின் வெற்றி சாதாரண நாட்களில் அவன் மேற்கொள்ளும் பயிற்சியில் அடங்கியுள்ளது. அதுபோலத்தான் நம் புதிய ஆரம்பம் என்பது நாம் ஒவ்வொரு நாளையும் வெற்றியாக்குவதில் உள்ளது.

ஆண்டையோ, மாதத்தையோ, வாரங்களையோ, நாட்களையோ, மனிதர்களையோ சாபமிடுவதில் எந்தப் பயனும் இல்லை. நீண்ட நேரம் துயில் கொள்வது, செல்போனில் கண் பதித்து நள்ளிரவு வரை அதிலேயே வாழ்ந்து கொண்டிருப்பது, சோம்பியிருப்பது, கள்ளத்தனம், கோபம் கொள்வது, போன்ற இத்தகைய தீய குணங்களை தீயிட்டு எரிப்போம்.

இந்தப் புதிய ஆரம்பத்தில் நமக்கென்று ஒரு குறிக்கோளை நியமித்துக் கொள்வோம்.

துடுப்பில்லாத படகு கரை சேராது
நீரில்லாத மீன் உயிர் வாழாது
தாயில்லாத சேய் அழாமல் இராது

அதுபோலவே,

குறிக்கோளில்லா மனிதன் தன் வாழ்நாளில் புதிய ஆரம்பத்தைக் காண முடியாது .

இந்தப் புத்தாண்டில் இயன்ற அளவு நற்செயல் செய்வேன், இயன்ற அளவு உழைப்பேன், இயன்றதைச் செய்வேன், இல்லாதவருக்கே என்று ஒரு உறுதிமொழி ஏற்போம்.

ஒவ்வொரு ஆண்டும் எத்தனையோ சபதங்களை நாம் ஏற்றிருப்போம். சில நாட்கள் மட்டுமே முயற்சித்து கைவிட்டு இருப்போம். அவைகளைப் போல இந்தாண்டும் இருந்திடா வண்ணம் எடுத்த சபதத்தை நிறைவேற்றுவோம். இப்புத்தாண்டில் புதிய ஓர் ஆரம்பம் காண்போம் .

கடந்து போன வாழ்கையை பற்றிக் கவலை கொள்ளாதே; எதிர்வரும் வாழ்வைப் பற்றி பயம் கொள்ளாதே, இந்த நிமிடம் மட்டும் இதயத்தில் கொள். இமயம் தொடுவாய் இழந்ததைப் பெறுவாய் புதிய ஆரம்பம் காண்பாய் .

# திருவள்ளுவர் ஓர் பார்வை

அகர முதல என்று தன் குறளினைத் தொடங்கி மொத்தமாக 1330 குறள்களைத் தந்து அதன் மூலம் மக்களுக்குத் தன் நன்னெறிகளை குறிப்புணர்த்தியவர் தான் திருவள்ளுவர். மக்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதனைத் தனது 133 அதிகாரங்கள் மூலம் தெளிவாகப் பல நூறு வருடங்களுக்கு முன்னரே இந்த உலகிற்குத் தெரிவித்துச் சென்றவர் என்ற பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

இன்றும் உலகப் பொதுமறை என்று அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நூலினை நமது தமிழ் இனத்தினைச் சேர்ந்த ஒருவர் எழுதியுள்ளார் என்பது தமிழர்களாகிய நமக்கு மிகப்பெரும் பெருமை என்றே கூறலாம். இப்படிப்பட்ட திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றின் தொகுப்பு இந்தப் பதிவில் உள்ளது.

**திருவள்ளுவர் பிறப்பு:** திருவள்ளுவரது பெயர், பெற்றோர் மற்றும் பிறப்பிடம் ஆகிய அனைத்தும் இன்று வரை உறுதி செய்யப்படவில்லை. இருந்தாலும் அவர் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் பிறந்திருக்கக் கூடும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் அவர் தற்போதைய சென்னையில் உள்ள மயிலாப்பூர் பகுதியில் பிறந்து வளர்ந்தவர் என்றும் ஒரு தகவல் உண்டு. மேலும் காவேரிப்பக்கம் பகுதியில் வாழ்ந்த மார்கசெயன் என்பவர் திருவள்ளுவரது கவித்திறனை நேரில் கண்டு பூரித்து தனது மகளான வாசுகியை திருவள்ளுவருக்கு மணமுடித்துத் தந்ததாகவும் கூறப்படுகிறது. பெயர் திருவள்ளுவர் பிறந்த வருடம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு (சரியான ஆதாரம் இல்லை) பிறந்த இடம் மயிலாப்பூர் (சரியான ஆதாரம் இல்லை) மனைவியின் பெயர் வாசுகி வசித்த இடம் மயிலாப்பூர்

**திருக்குறள் என்னும் அற்புதப் படைப்பு:** வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று அனைவராலும் போற்றப்படும் அளவிற்கு தமிழுக்குப் புகழைச் சேர்த்த இவரது மிகச்சிறந்த படைப்பு இந்தத் திருக்குறள் எனும் நூல். திருக்குறளை படிக்காத தமிழன் இல்லை என்று கூட கூறலாம். அந்த அளவிற்குத் தமிழ் நன்னெறி நூலாக உள்ளது. திருக்குறளின் உன்னதத்தினை உணர்ந்த ஜி.யு. போப் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரடிகளில் உலகின் தத்துவத்தினைத் தெள்ளத்தெளிவாகக் கூறி அனைவரும் எளிமையாகப் புரிந்து கொள்ளும் அளவிற்குத் தன் கருத்துகளை அதில் முத்து முத்தாகப் பொறித்துள்ளார். மொத்தம் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இந்த நூல் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. அறத்துப்பால் 38 அத்தியாயங்கள் பொருட்பால் 70 அத்தியாயங்கள் காமத்துப்பால் 25 அத்தியாயங்கள்

**அறத்துப்பால் :** முதல் பிரிவான அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அதில் அறம் சார்ந்த வாழ்வியல் கருத்துக்கள் முதல் இல்லறம் போன்ற பல கருத்துக்களைக் கூறி அறத்தின்படி எவ்வாறு வாழ்க்கையினை முறைப்படுத்திக் கொண்டு செல்லவேண்டும் என்று கருத்துகளை விவரித்து உள்ளார்.

**பொருட்பால்:** இரண்டாவது பாலான பொருட்பாலில் 70 அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன. உட்பிரிவுகள் மூலம் அரசியல், ஊழியல் மற்றும் துறவறவியல் போன்ற கருத்துக்களை இடம் பெறவைத்துள்ளார்.

**காமத்துப்பால்:** மூன்றாம் பாலான காமத்துபாலில் களவியல் மற்றும் கற்பியல் என்ற உட்பிரிவுகள் மூலம் காதல், இன்பம் மற்றும் இல்லறம் குறித்தக் கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார். இந்த மூன்று வகைப்பாட்டின் மூலம் வாழ்வியல் கருத்துகளைக் கூறி வாழ்வின் உன்னதத்தைக் கூறி மக்களை நெறிப்படுத்தியப் புலவர் திருவள்ளுவர் உலகத்திற்கு அழியாப் பொக்கிஷமான திருக்குறளைத் தந்து சென்றார்.

**திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் :** திருக்குறள் ஒரு பொக்கிஷ நூலாக இன்றுவரை கருதப்படுகிறது. அவற்றிற்குப் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. அதனை கீழே குறிப்பிட்டுள்ளோம். உலகப் பொதுமறை முப்பால், ஈரடி நூல், உத்திரவேதம், தெய்வநூல் தமிழ் மறை பொய்யாமொழி வாயுறை வாழ்த்து.

**திருவள்ளுவரின் இறப்பு:** தமிழ்ப் புலவரான திருவள்ளுவர் இறப்பு குறித்து இன்றுவரை அதிகாரபூர்வமான குறிப்புகள் இல்லை. ஆனால், மயிலாப்பூரில் பிறந்து வளர்ந்த இவர் ஒளவையார் உதவியுடன் மதுரையில் உள்ள தமிழ்ச்சங்கத்தில் திருக்குறளினை அரங்கேற்றினார் என்று நம்பப்படுகிறது.

**திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள்:** திருக்குறளினைத் தந்த திருவள்ளுவருக்கும் பல சிறப்புப் பெயர்களைப் பலரும் அளித்தனர். அதில் முக்கியமானவைகளைக் கீழே தொகுத்து உள்ளோம். பொய்யில் புலவர், தெய்வப்புதல்வர், முதற்பாவலர், செந்நாப்போதனார், தேவர் நாயனார், பெருநாவலர்.

**திருவள்ளுவரின் நினைவுச்சின்னங்கள் மற்றும் சிலை :** வள்ளுவர் கோட்டம் இன்றைய சென்னையில் உள்ள ஒரு முக்கியப் பகுதி இந்த வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவருக்காக ஒரு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குறள் மண்டபத்தில் அனைத்துக் குறள்களும் பதிக்கப்பட்டுள்ளன. இன்றுவரை தமிழக அரசு அதனை சிறப்பாகப் பேணிக்காத்து வருகிறது. வள்ளுவரின் திருஉருவச்சிலை தமிழக மற்றும் இந்திய தேசத்தின் கடைக்கோடியான கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. அவரது 133 அதிகாரங்களின் நினைவாக அந்தச் சிலையானது 133அடிகள் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலையினைச் செய்த சிற்பியின் பெயர் கணபதி ஸ்தபதி. திருவள்ளுவருக்காக அவரது பிறப்பிடமாகக் கருதப்படும் மயிலாப்பூரில் ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. இன்றுகூட அதனை நீங்கள் காண முடியும். அந்தக் கோவிலானது மயிலாப்பூர் முண்டகக் கன்னியம்மன் கோயில் அருகில் உள்ளது. இவை மட்டுமின்றி மயிலாப்பூர் மற்றும் பல நாடுகளில் வள்ளுவரின் புகழினை உணர்ந்த பல சிலைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

Book-Post

To

We welcome suggestions and contributions from the readers for improving the quality and content of the bulletin.

B.K. Krishnaraj Vanavarayar, Chairman, Bharatiya Vidya Bhavan, 582, D.B. Road, R.S. Puram
Coimbatore - 641 002. Telephone : 2542481 E-mail : kendra@bvbcbe.in